Vol:4 Issue 2 Nov.2020 P.g No: 23 - 28




***கட்டுரையாளர் :***

***முனைவர்*** *க. மோகன்காந்தி,*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் மாவட்டம்.*

## ***தலைப்பு : சவ்வாதுமலைவாழ் மக்களின் புழங்கு பொருட்கள்***

shctpt.edu

### ***முன்னுரை***

*கிழக்குத் தொடர்ச்சிமலைகளின் ஒரு கூறு சவ்வாதுமலை. இம்மலையில் 300 க்கும் மேற்பட்ட மலைச் சிற்றூர்கள் உள்ளன. இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். வேளாண்மை, ஆநிரை மேய்த்தல், தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், கடுக்காய், புளி சேகரித்தல் உள்ளிட்ட முக்கியத் தொழில்கள் இம்மலையில் நடைபெறுகின்றன. இம்மலை வடக்கே அமிர்தியையும் (வேலூர்), தெற்கே சிங்காரப் பேட்டையையும் (கிருட்டிணகிரி மாவட்டம்), மேற்கே ஆலங்காயத்தையும் (திருப்பத்தூர் மாவட்டம்), கிழக்கே தும்பக் காட்டையும் (திருவண்ணாமலை மாவட்டம்) எல்லைகளாக் கொண்ட பெரும் மலையாகும். இது 250 கி.மீ சுற்றளவும், 70 கி.மீ அகலமும் கொண்டது இம்மலை. இங்கு வாழும் மக்கள் பயன்படுத்தும் புழங்கு பொருட்கள் இங்குப் பாடுபொருளாக அமைகின்றன.*

**ஏணி வகைகள்**

சவ்வாதுமலைவாழ் மக்கள் இரண்டு வகையான ஏணிகளைப் பயன்படுத்துகின்றனர். 1. ஒற்றை ஏணி, 2. இரட்டை ஏணி.

***1. ஒற்றை ஏணி***

ஒற்றை ஏணி என்பது நீண்ட மூங்கில் மரத்தை வெட்டி எடுத்து வருகின்றனர். அதிலுள்ள கணுக்கள் உறுதியானது. மூங்கிலின் இரண்டு பக்கங்களிலும் இருக்கும் கணுக்களில் கால்களை வைத்து, அதன் மேலுள்ள கணுக்களைக் கைகளால் பிடித்துக் கொண்டு, உயரமாக இருக்கும் மரங்களில் தேனடை மற்றும் உள்ள கனிகள் போன்றவற்றைப் பறிக்கப் பயன்படுத்துகின்றனர். இது இம்மக்களின் இயற்கை வாழ்வியலுக்குச்சார் சிறந்த எடுத்துக்காட்டாகும். இது இம்மக்களின் புழக்கத்தில் இருக்கும் சிறந்த ஒரு புழங்கு பொருளாகும்.

***2. இரட்டை ஏணி***

சிறந்த உறுதியாக வளர்ந்த இரண்டு மூங்கில்களை அதன் கணுக்களோடு எடுத்து வருகின்றனர் மலைவாழ் மக்கள். இரண்டு மூங்கில்களையும் எதிர் நிலையில் வைத்து அதன் கணுக்களை மற்றொரு மூங்கிலில் பொருந்துமாறு



ஒற்றை ஏணி

துளையிடுகின்றனர். இந்தக் கணுக்களின் துளைகள் ஒருவர் ஏறுவதற்கு ஏற்ப அமைக்கப்படுகின்றன. இந்த ஏணிகள் வீடுகளின் உள்ளே உள்ள பரண்களில் இருக்கும் பொருட்களை ஏற்றவும், இறக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஏணிகளை மக்கள் யாரிடமும் சென்று வாங்குவதில்லை. தமக்குத் தேவைப்படும் போது காடுகளுக்குச் சென்று மூங்கிலைக் கொண்டு வந்து, அந்தக் குடும்பத்தாரே ஏணிகளைச் செய்துகொண்டு தன்னிறைவோடு வாழுகின்றனர்.



இரட்டை ஏணி

**வைக்கோல் பரண்**

சவ்வாதுமலையில் கால்நடை வளர்ப்பு மிகுதி. ஆடுகள், கோழிகள், பன்றிகள் போன்று மாடுகள் வளர்ப்பும் ஏராளம். இம்மலை மாடுகள் நாட்டுமாடுகள் வகையைச் சேர்ந்தவை. தங்களுக்குத் தேவையான பால், மோர், தயிர், வெண்ணெய், நெய் ஆகியவற்றைத் தங்களின் வளர்ப்பு மாடுகளின் பால்களின் மூலம் பெறுகின்றனர். காளை மாடுகள் ஏரோட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. மிகு பால் பொருட்கள் சமவெளிப் பகுதிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. மலைமக்களின் வாழ்வியலில் மாடுகளுக்கு முக்கியப்பங்குண்டு. ஆநிரைக் கவர்தல் – மீட்டல் தொடர்பான நடுகற்களும் இம்மலையில் ஏராளமாக உள்ளன. மாடுகளுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அதாவது தினை, வரகு, சாமை, நெல் அறுவடைக்குப் பிறகு எஞ்சிய தாள்களை (வைக்கோல்) மாடுகளுக்காகச் சிறுபரண் கட்டிப் பாதுகாக்கின்றனர். பத்து அடி உயரமுள்ள நான்கு மூங்கில் கழிகளை ஆழமாகப் பள்ளம் தோண்டி புதைத்து, அவற்றின் இடையே மரத்துண்டுகளைக் குறுக்கும் நெடுக்குமாக வைத்துக் கட்டுவர். பிறகு அதன் மேலாக வைக்கோல் போரினை அமைப்பர். இந்தப் பரண் மாடுகளுக்கு எட்டாத உயரத்தில் இருப்பதால் வைக்கோல் பாதுகாப்பாக வைக்கப்படுகிறது. தேவைப்படும் போது மாடுகளுக்கு வைக்கோல் பிடுங்கிப் போடப்படுகிறது. அந்தப் பரணின் கீழாக உள்ள நான்கு தூண்களில் மாடுகள் கட்டப்படுவதால் வெயில், பனி, மழையில் இருந்து மாடுகள் பாதுகாக்கப்படுகின்றன. மாட்டுத் தொழுவத்தில் அமையும் கொட்டாய் போல, இதுவும் மழைக்கு ஒழுகாமல் மாடுகள் பாதுகாக்கப்படுகின்றன. மலைவாழ் மக்கள் வைக்கோல் சேமிக்கும் இடமாகவும், மாடுகளைக் கட்டும் குடிசையாகவும் வைக்கோல் பரணைப் பயன்படுத்துகின்றனர்.



வைக்கோல் பரண்

**முறம்**

மூங்கிலால் செய்யப்படும் பொருள் முறம். முனையில் அகன்றும் கடைசியில் சிறிது குறுகியும் முறம் இருக்கும். தானிய வகைகள், கொட்டை வகைகள், பயிறு வகைகளைப் புடைப்பதற்குப் பயன்படும் பொருள் முறமாகும். மூங்கிலால் செய்யப்பட்ட முறம் சாணம் கொண்டு மெழுகி வெயிலில் காய வைத்து இதைப் பயன்படுத்துகின்றனர்.



முறம்

**தானியக் குதிர்**

மலைவாழ் மக்களின் ஒவ்வொருவரின் வீடுகளிலும் தானியக் குதிர்கள் இருக்கும். மூங்கில் படல்களைக் கொண்டு இவற்றை வடிவமைப்பர். இதில் மேலாக சாணத்தைக் கொண்டு மெழுகுவர். தானியக் குதிர் இம்மக்களால் தெய்வமாகப் பார்க்கப்படுகிறது. மஞ்சள், குங்குமம் இட்டு இதனைப் போற்றிப் பாதுகாக்கின்றனர். கீழே மரக்கட்டைகளையோ, கற்களையோ கொண்டு சற்று உயரமாக்கி அதன் மேலாகத் தானியக் குதிர் வைக்கப்படுகிறது. இதில் சாமை, தினை, வரகு, கேழ்வரகு, கம்பு, நெல் போன்ற தானிய வகைகள் சேகரிக்கப்பட்டு வைக்கப்படுகிறது. இது போன்ற சிறிய தானியக் குதிர்களைத் தனித்தனியாக இல்லங்களில் வைத்துப் பயன்படுத்துவர்.

மிகுதியாகத் தானியங்கள் விளையும் போது, ஊரின் பொதுவில் பெரிய தானியக் களஞ்சியத்தை ஏற்படுத்தி அதில் தானியங்களைச் சேகரித்து வைப்பர். அதற்குப் பெயர் “தொம்பை” என்பதாகும். இது இம்மக்களின் இனக்குழு வாழ்க்கையின் சேகரிப்புத் தன்மையையும் பகுத்துண்ணும் பங்கீட்டு முறையும் வெளிப்படுத்துவதாகும்.





தானியக் குதிர் தொம்பை

**ஏற்ற – இறக்கம் (இராட்டினம்)**

மலைவாழ் சிறுவர்கள் ஒன்று கூடி விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று ஏற்றஇறக்கம். உறுதி வாய்ந்த சரி சமமான மரத்துண்டு ஒன்றை எடுத்துக் கொள்வர். குறிப்பாக தேக்கு, பலா, மூங்கில் போன்ற ஏதேனும் ஒரு மரத்துண்டை எடுத்துக் கொண்டு, அதன் மையத்தில் துளை இடுவர். உறுதியான ஒரு மீட்டர் உயரம் கொண்ட மற்றொரு மரத்துண்டைக் குழித்தோண்டி, கற்களைக் கொண்டு இடித்து பூமியில் இருந்து மேல் நோக்கி நிறுத்துவர். இதன் முனைப்பகுதியைக் கூர்மையாக்கி, சமமாக இருக்கும் மரக்கட்டையின் துளையில் பொருத்துவர். இப்பொழுது சிறுவர்கள் விளையாடும் ஏற்ற – இறக்கம், (சுழலும் இராட்டினம்) தயாராகிவிடும். குழந்தைகள் மகிழ்ச்சியோடு பலர் ஒன்று கூடி விளையாடுவர். இன்றைக்கு சீசா *(see – saw)* என்னும் பெயரில் பெரிய நகரங்களில் உள்ள பூங்காக்களில் சிறுவர்கள் இரும்பால் ஆன சீசாவில் விளையாடி மகிழ்வதைக் காணலாம்.

மலைவாழ் மக்கள் தங்களோடு புழக்கத்தில் இருக்கும் மரக்கட்டைகளை நுட்பமாக செதுக்கித் தங்கள் பிள்ளைகளுக்கு விளையாட்டுக் கருவிகளாகப் பயன்படுத்துவது இங்குச் சிறப்புக்குரியது.



ஏற்ற – இறக்கம் சிறுவர் விளையாட்டு



ஏற்ற – இறக்கம் செய்யும் முறை

**முடிவுரை**

சவ்வாதுமலைவாழ் மக்கள் தாம் பயன்படுத்தும் புழங்கு பொருட்களை இயற்கையில் கிடைக்கும் மரம், செடி, கொடிகள் ஆகியவற்றின் பயன்பாட்டை அறிந்து தயாரிப்பவர்களாக உள்ளனர். தங்களுக்குத் தேவையான பொருட்களைத் தாமே செய்து கொள்ளும் தன்னிறைவுப் பெற்றவர்களாகவும் விளங்குகின்றனர். இங்குக் குறிப்பிட்டப் பொருட்கள் மட்டுமின்றி வீட்டின் தலைவாசல், கதவு, முறம், ஏணி, ஏர்க்கலப்பைகள் என ஏராளமான பொருட்களைச் செய்யும் ஆற்றல் உடையவர்களாக உள்ளனர். இம்மலை மக்கள் மலையையே தம் செல்வமாகக் கொண்ட இயற்கைசார் வாழ்வியலை மன நிறைவோடு வாழ்பவர்கள் ஆவர்.

**தகவலாளர் பட்டியல்**

1. கோவிந்தன் *(55)*, கீழூர், சவ்வாதுமலை
2. வேடி *(40)*, மேல்பட்டு, சவ்வாதுமலை
3. வேந்தன் *(28)*, கீழூர், சவ்வாதுமலை